**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**

****************

**ஊடக அறிக்கை**

# ஸ்ரீ குரு நாணக் தேவ் அவர்களின் 550 ஆவது ஜனன தினம் கொழும்பில் அனுஸ்டிப்பு

இந்திய உயர் ஸ்தானிகராலயம் ஸ்ரீ குரு நாணக் தேவ் அவர்களின் 550 ஆவது ஜனன தினத்தை கொழும்பில் 09 நவம்பர் 2019 அன்று அனுஸ்டித்தது.

ஸ்ரீ குரு நாணக் தேவ் அவர்கள் சீக்கியத்தின் ஸ்தாபகராகவும் முதலாவது குருவாகவும் உள்ளார். சீக்கியம் உலகின் இளமையான மதங்களில் ஒன்றாக உள்ளது. அவர் ஒரு கவிஞர், மத போசகர், சமூக மறுமலர்ச்சிவாதி மற்றும் குடும்பஸ்தர் என்ற பல முகங்களை கொண்டிருந்தாலும் சகல வடிவங்கள் மற்றும் பெயர்களுக்கு அப்பால் ஒரு கடவுள், எல்லாம் வல்லவர் , எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிந்தவர் என்பதனை போதித்து வந்தார். சகல மனிதர்களும் சமமானவர்கள் என்ற சமூக கோட்பாட்டின் மூலமாக சாதி, மதம், நிறம், இனம் மற்றும் பண வேறுபாடுகளுக்கு எதிரானதாக அந்த கோட்பாடு அமைந்திருந்தது.

கிறிஸ்துக்கு முன்னரான 15 ஆம் நூற்றாண்டுகளின் பிற்பகுதியிலும் 16 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இந்திய துணைக்கண்டத்தின் வட மேல் பகுதியில் சீக்கியம் உருவாகியது, தற்போது உலகளவில் 30 மில்லியனுக்கும் அதிகமானோர் இதனை பின்பற்றி வருகின்றனர். இது உலகின் 5 ஆவது கட்டுக்கோப்பான மதமாக இருக்கும் அதேவேளை உலகளாவிய மதங்களில் ஐந்தாம் இடத்திலும் உள்ளது. சீக்கியமானது முதலாவது குரு நாணக்கின் ஆன்மீக போதனைகளின் அடிப்படையில் காணப்படும் அதேவேளை பத்தாவது குருவான குரு கோபிந் சிங் அவரை தொடர்ந்து குருவாக பொறுப்பேற்றதுடன் இந்த போதனைகளுக்கு குரு கிராந்த் ஷாஹிப் எனப்பெயரிட்டார். அதன்மூலமாக மனிதர்கள் குருவானவர்களாக இருப்பதனை முடிவுக்கு கொண்டுவந்த அதேவேளை அந்த கோட்பாடுகளை ஆதிமூலமாக பிரகடனப்படுத்தி சீக்கியர்களுக்கான வழிகாட்டியாக மாற்றினார். குரு நாணக் தேவ் அவர்களின் ஜனன தினம் உலகம் முழுவதும் கர்தாக்(ஒக்டோபர்-நவம்பர்) பூரணை தினத்தில் அனுஸ்டிக்கப்படுகிறது.

குரு நாணக் தேவ் அவர்கள் இந்திய துணைக்கண்டம் மற்றும் மேற்கு ஆசியாவின் சகல பகுதிகளுக்கும் விஜயம் மேற்கொண்டுள்ளார். அவர் இலங்கைக்கும் வருகை தந்திருப்பதாக கூறப்படுகிறது. தனது ஆன்மீக பயணங்களின்போது இந்துக்கள், சமணர்கள், பௌத்தர்கள், பார்சிகள் மற்றும் முஸ்லீமகளின் பல்வேறு மதத்தலைவர்களுடன் சந்திப்புக்களை மேற்கொண்டிருந்தார். கடவுள் ஒன்று என்ற கொள்கையுடன் இருக்கும் அதேவேளை சகிப்புத்தன்மையை போதிக்கும் மதங்களை சார்ந்தவர்களுடன் அவர் சம்பாசனைகளை மேற்கொண்டிருந்தார். அதன் பின்னர் அவர் பிரத்தியேகமான ஆன்மீக, சமூக மற்றும் அரசியல் தளம் ஒன்றை சமத்துவம் எல்லையற்ற அன்பு, நல்லெண்ணம் மற்றும் நல்லொழுக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கியிருந்தார்.

இந்த விசேட தினத்தை இந்திய உயர்ஸ்தானிகராலயம் உரையாடல், ஆவணப்படம் திரையிடல், கொழும்பிலுள்ள ஸ்ரீ குரு நாணக் தர்பார் குருத்வராவின் கியாஞ்சியினால் கிர்தான்/ஆர்தாஸ் என்ற பக்திபூர்வமான இசை நிகழ்வும் நடத்தப்பட்டது.

இந்திய உயர்ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து இந்த நிகழ்வில் அதிதியாக கலந்துகொண்டார்.

குறித்த நாளில் ‘கர்தார்பூர் நுழைவாயில்’ திறக்கப்பட்ட நிகழ்வுக்கு சமாந்தரமாக இந்த கொண்டாட்டம் இடம்பெற்றது.

*****

கொழும்பு

11 நவம்பர் 2019